வேலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.ப்பி.விஜயராகவன், B.Com.,

ந.க.அ3/1707/2020 நாள். 28.04.2023

பொருள் : பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – வேலூர் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட பவித்ரா (திருமதி) S., என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

படிக்கப் பட்டவை : அரசாணை (3டி) எண்.43 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலகு [பணி 9(1)] துறை, நாள். 10.03.2023.

*******

ஆணை:-

வேலூர் மாவட்ட வருவாய் அலகில், கிராம நிருவாக அலுவலராக பணியாற்றி பணியிடையே 19.12.2019 அன்று காலமான திரு.தரணி என்பவரின் மனைவி திருமதி. S.பவித்ரா என்பவர் வேலூர் மாவட்ட வருவாய் அலகில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 03.12.2020 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். இவரது பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் 03.12.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்த மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து திருமதி. S.பவித்ரா என்பவருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் இவரது பணியினை தமிழ்நாடு அமைச்சு பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் 03.12.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்தும், தனியரது தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது. தனியரது தகுதிகாண் பருவம் மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயிக்கப்படுகிறது.

| வ.எண். | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரன்முறை செய்யப்பட்ட நாள். |
|---|---|---|
| 01 | திருமதி. S.பவித்ரா,<br>தனிவட்டாட்சியர் (ச.பா.தி)<br>அலுவலகம்,<br>குடியாத்தம். | 03.12.2020 முற்பகல். |

2) சம்மந்தப்பட்ட நபரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகளை சம்மந்தப்பட்ட அலுவலர் மேற்கொள்ள வேண்டியது.

ஒம்/- ப்பி.விஜயராகவன்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
வேலூர்.

//ஆணைப்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர். – குடியாத்தம் தனிவட்டாட்சியர் (ச.பா.தி) மூலமாக.

நகல் : தனிவட்டாட்சியர் (ச.பா.தி), குடியாத்தம்.
நகல் : "அ3" இருக்கைக்கு.

Scanned with CamScanner